அனைத்திந்திய பொறியியல் அமைப்பு.

*** 726 வினா—திரு. நா. சௌந்திரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசால் தமிழ்நாடு அரசிடம் இந்தியப் பொறியாளர்களின் அமைப்பு (Indian Service of Engineers) அமைப்பது குறித்து ஆலோசனை கேட்கப்பட்டதா ?

(இ) அதனை அரசு ஏற்றுக்கொண்டதா ?

(உ) இல்லை எனில், காரணமென்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) ஆம்.

(இ) & (உ) பொறியியல் போன்ற துறைகள் மாநில ஆட்சியின் வரம்புக்குட்பட்டன. ஆகையால் அனைத்து இந்திய பொறியியல் அமைப்பில் இந்த அரசு பங்கு கொள்ள வேண்டியதில்லை எனக் கொள்கை அளவில் முடிவு எடுத்துள்ளது. எனவே, மத்திய அரசினர் செயற்குறிப்பை இவ்வரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : மற்ற மாநிலங்களில் அந்த வர்க்கத்திலே சேரவேண்டுமென்று ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலம் அப்படித் தெரிவிக்கவில்லை. கொள்கையளவிலே சர்க்கார் அதை ஆதரிக்கக் கூடிய வகையில் மீண்டும் மறு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மறு பரிசீலனை செய்கின்ற எண்ணம் அரசுக்கு இல்லை.

Lloyds Road Housing Colony.

*** 727 *Q.*—Thiru N. S. V. CHITHAN :** Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether a Housing Board Colony has been built near the Infectious Diseases Hospital in Lloyds Road, Madras ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : 1944-க்கு முன் தொத்து நோய் மருத்துவமனையாக இருந்த சென்னை மாநகராட்சி பேணி வரும் நோயுற்றோர், முடமான பிச்சைக்காரர் தனி விடுதிக்கு அருகே லாயிட்ஸ் சாலை குடியிருப்பு கட்டப்பட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மக்கள் தொகை அதிகமாக உள்ள இடத்தில் அந்த இடம் இருப்பதாலே நோய் பரவுவதற்கு இடம் ஏற்படுவதால் அதை வேறு இடத்திற்கு மாற்ற இனியாவது அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, ஏற்கனவே 1944-க்கு முன்னாலே தொத்து நோய் வியாதியஸ்தர்கள் இருந்தார்கள். 1944-இலே மாநகராட்சி நடத்துகின்ற பெக்கர் ஹோமாக மாற்றப்பட்டது. ஆகையினால் தொத்து நோய் வியாதியஸ்தர்கள் அங்கு தங்குவது கிடையாது. 1964-ஆம் ஆண்டில் அந்தக் காலனி கட்டப்பட்டது. இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, பெக்கர் ஹோமாக இருப்பதால் அங்கே குடியிருப்போருக்கு எந்த விதமான கெடுதலும் ஏற்படாது. எனவே அதை மாற்றுவதற்கு அவசியமில்லை.